**Dinamadhi, Coimbatore, November 12, 2009**

# மாணவர்களுக்கான வினாடி வினா போட்டி

**கோவை, நவ.12-**

கோவையில் மாணவர்களுக்கான வினாடி வினா போட்டி நடைபெற்றது.

தகவல் தொழில்நுட்ப நிறுவனமான டாட்டா கன்சல்டன்சி சர்வீஸஸ் கோவையில் வினாடி வினா போட்டி நடத்தியது. கோவை, திருப்பூர், பொள்ளாச்சி, ஈரோடு, உடுமலைப்பேட்டை, மேட்டுப்பாளையம், ஊட்டி ஆகிய பகுதகிளிலிருந்து எண்ணூறுக்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டனர்.

இரண்டு வெளியேற்று சுற்றுக்கள் மூலம் 6 குருப்புகள் இறுதி செய்யப்பட்டு வினாடி வினா போட்டி நடைபெற்றது. இப்போட்டியில் முதல் பரிசாக கோத்தகிரியைச் சேர்ந்த ஜூடு பப்ளிக் பள்ளியில் படிக்கும் ஆகாஷ், லோகா, கிரண்பரை ஆகிய மாணவர்கள் முதல் பரிசையும், கோவை எஸ்.பி.ஓ.ஏ பள்ளியைச் சேர்ந்த சிவிக்குமரன், கவுதம் ஆகியோர் இரண்டாம் பரிசைப் பெற்றனர்.